# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீட்டு எண்: 42 / 2020 நாள்: 04.11.2020

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கான பல்வேறு புதிய தகவல்கள் மற்றும் வசதிகளுடன் புதிய இணையதளம். தேர்வாணையத் **தலைவர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப (ஓய்வு)** அவர்களால் இன்று துவக்கிவைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் 2012லிருந்து 4.8 கோடிக்கும் மேற்பட்ட நபர்களால் பார்வையிடப்பட்ட www.tnpsc.gov.in என்ற இணைய முகவரியில் இயங்கி வந்த தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இணையதளம், எட்டு வருட காலத்திற்குப் பிறகு தற்போது புதுப்பொலிவுடன் மாற்றி வடிவமைக்கப்பட்டு, அதே **www.tnpsc.gov.in** முகவரியில் கீழ்கண்ட சிறப்பம்சங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்:**

- தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் அனைத்து தகவல்கள்.
- மத்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள இந்திய அரசு இணையத்தளங்களுக்கான நெறிமுறைகளை (Guidelines for Indian Government Websites) பின்பற்றி இந்த இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது
- விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான எந்த ஒரு தேர்வு குறித்த அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் வழங்கும் வகையில் தேர்வு தகவல் பலகை **(EXAM DASHBOARD)** என்ற பக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பார்வை குறைபாடு (Colour Blindness, Low Vision and Visually Impaired) உள்ளவர்களும் தமக்கு தேவையான விவரங்களை தாங்களே எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த இணையதளம் மூலமாக விண்ணப்பதாரர்கள் பின்னூட்டம் (FEEDBACK) அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செயலாளர்